

பாடம் 10
செப்டம்பர் 5, 2026

# உண்மையான கிறிஸ்தவ ஊழியம்


"நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை;
கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை; துன்பப்படுத்தப்பட்டும்
கைவிடப்படுகிறதில்லை; கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை.
கர்த்தராகிய இயேசுவினுடைய ஜீவனும் எங்கள் சரீரத்திலே விளங்கும்படிக்கு,
இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம்."
(2 கொரிந்தியர் 4:8-10)

போதகரின் வாழ்க்கை வசதியானது என்று யார் சொன்னது? நற்செய்தி ஊழியர்கள் பெரும் பொறுப்பை சுமக்கிறார்கள்: அவர்களின் முயற்சிகள் ஆபத்துக்கள் இல்லாதவை அல்ல.



அழிந்துபோன ஆத்துமாக்களின் மீதான அன்பும், நற்செய்தியை ஏற்கனவே ஏற்றுக்கொண்டவர்களை காத்து வளர்ப்பதில் காட்ட வேண்டிய கனிவான அக்கறையுமே, உண்மையான ஊழியர்களை கொடூரமான ஓநாய்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றன.

திருச்சபையானது தனது ஊழியர்களுடன் செயல்பட்டு, தனது வாழ்க்கை முறையில் தீர்க்கமான மாற்றங்களை செய்யும்போது, அது அனைவருக்கும் ஆறுதலையும் மகிழ்ச்சியையும் அளிக்கும் ஒரு நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் சக்தியாக மாறுகிறது.



- போதகரின் வேலை
  - திறமையான ஊழியர்கள்
  - ஊழியத்திலுள்ள இடர்பாடுகள்
- சபை அங்கத்தினர்களின் கடமைகள்
  - நல்லிணக்கத்தின் தூதுவர்கள்
  - பரிசுத்தத்திற்கான அழைப்பு
- கூட்டு முயற்சியின் விளைவு
  - ஆறுதலும் மகிழ்ச்சியும்

# போதகரின் வேலை



# திறமையான ஊழியர்கள்

"எங்கள் இருதயங்களில் எழுதப்பட்டும், சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற எங்கள் நிருபம் நீங்கள்தானே." (2 கொரிந்தியர் 3:2)





காலப்போக்கில் சில விஷயங்கள் பெரிதாக மாறுவதில்லை. முதல் நூற்றாண்டில் இருந்ததைப் போலவே, இன்றும் பரிந்துரைக் கடிதங்கள் புதிய வாய்ப்புகளுக்கான கதவுகளை திறந்து வைக்கின்றன. கொரிந்து சபையினரால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு பவுலுக்கு ஒரு பரிந்துரை கடிதம் தேவைப்பட்டதா? (2 கொரிந்தியர் 3:1)

அவரிடம் மிக சிறந்த பரிந்துரை கடிதம் இருந்தது: அது கொரிந்தியர்களே ஆவர் (2 கொரி. 3:2). அப்போஸ்தலரும் அவருடைய உடன் பணியாளர்களும் செய்த பிரசங்கத்தின் மூலம், தேவனுடைய கிருபையினால் அவர்களுடைய இருதயங்கள் மாற்றப்பட்டிருந்தன (2 கொரி. 3:3).



பவுலும் அவருடைய உடன் பணியாளர்களும் "புது உடன்படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படி, அவரே... தகுதியுள்ளவர்களாக்கினார்" (2 கொரி. 3:6). நித்திய ஜீவனுக்காக ஆவியானவரால் இருதயத்தில் எழுதப்பட்ட ஒரு மகிமையான உடன்படிக்கை.



ஆனால் சிலர் வேறொரு உடன்படிக்கையை பின்பற்றினார்கள், அதாவது கல்லில் எழுதப்பட்ட நியாயப்பிரமாணத்தின் கிரியைகள் மூலமாகவே இரட்சிப்பு உண்டாகும் என்ற உடன்படிக்கை அது, இதுவே கிருபையின் மகிமையை அவர்கள் உணர்ந்து கொள்வதை தடுத்தது (2 கொரி. 3:7-9).

# ஊழியத்திலுள்ள இடர்பாடுகள்

**“தேவனுடைய மகிமை விளங்குவதற்கேதுவாகக் கிருபையானது அநேகருடைய ஸ்தோத்திரத்தினாலே பெருகும்படிக்கு, இவையெல்லாம் உங்கள்நிமித்தம் உண்டாயிருக்கிறது.” (2 கொரிந்தியர் 4:15)**


ஊழியத்திலுள்ள இடர்பாடுகளை பவுல் புரிந்துகொண்டு அவற்றை ஏற்றுக்கொண்டார். ஆனால், அந்த இடர்பாடுகள் மதிப்பிற்குரியவை என்பதை அவர் அறிந்திருந்தார்: இரட்சிப்பை பெறுவதற்கான வாய்ப்பை யாருக்கு அளிப்பாரோ, அந்த மக்களின் மீதான அன்பின் நிமித்தமே அவர் அவற்றை சகித்துக்கொண்டார் (2 கொரி. 4:15). அதற்கும் மேலாக, அவருக்கு தெய்வீக உதவியின் மீதான உறுதியான நம்பிக்கை இருந்தது (2 கொரி 4:7-9):



| நாங்கள்… | ஆனால்… |
| --- | --- |
| எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் | ஒடுங்கிப்போகிறதில்லை; |
| கலக்கமடைந்தும் | மனமுறிவடைகிறதில்லை |
| துன்பப்படுத்தப்பட்டும் | கைவிடப்படுகிறதில்லை; |
| கீழே தள்ளப்பட்டும் | மடிந்து போகிறதில்லை. |

மகிமை இறைவனுக்கு மட்டுமே சேரும்படியாக, பலவீனமான மனிதர்கள் மூலமாக நற்செய்தி அறிவிக்கப்படுகிறது.

“அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான … உபத்திரவமாகிய” இந்த பாடுகளை, உயிர்த்தெழுதலின் நாளிலே நாம் பெறப்போகிற “மிகவும் அதிகமான நித்திய கனமகிமையோடு”, ஒப்பிடமுடியாது (2 கொரி. 4:14-18).



# சபை அங்கத்தினர்களின் கடமைகள்

# நல்லிணக்கத்தின் தூதுவர்கள்

“இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது; அவர் இயேசுகிறிஸ்துவைக்கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்.” (2 கொரிந்தியர் 5:18)





திருச்சபையின் (மற்றும் அதன் ஒவ்வொரு அங்கத்தினரின்) வாழ்க்கையை வழிநடத்த வேண்டிய உந்துசக்தி இதுவேயாகும்: “கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது;” (2 கொரிந்தியர் 5:14). இந்த அன்பு எதைக் கொண்டிருக்கிறது, மேலும் எதை செய்ய தூண்டுகிறது?





கிறிஸ்து அன்பினால் தம் உயிரைக் கொடுத்தார். இது அவருக்காக வாழ நம்மைத் தூண்டுகிறது(2 கொரிந்தியர் 5:14-15).

கிறிஸ்து நம்மை புதிய படைப்புகளாக மாற்றியுள்ளார். இது நம் பழைய வாழ்க்கையை பின்னால் விட்டுவிட நம்மைத் தூண்டுகிறது (2 கொரி. 5:17)

கிறிஸ்து நம்மை தேவனோடு ஒப்புரவாக்கியிருக்கிறார். இது நம்மை ஒப்புரவாக்குதலின் தூதுவர்களாக இருக்க தூண்டுகிறது (2 கொரி. 5:18-20).





ஆகவே, கிறிஸ்துவின் அன்பு நம்மை வாழ்வின் ஒரு தீவிரமான மாற்றத்திற்கு இட்டு செல்கிறது. கிறிஸ்துவின் அன்பை நம் வாழ்வில் கடைபிடிப்பது, அந்த அன்பை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளவும், நம்பிக்கையின் செய்தியை ஏற்றுக்கொள்ளுமாறு அவர்களை ஊக்குவிக்கவும் நம்மைத் தூண்டுகிறது: “தேவனோடே ஒப்புரவாகுங்கள்” (2 கொரி. 5:20).

# பரிசுத்தத்திற்கான அழைப்பு



“இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால், பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்.” (2 கொரிந்தியர் 7:1)

பழைய ஏற்பாட்டின் பல்வேறு பகுதிகளை ஒருங்கிணைத்து, பரிசுத்தத்திற்கான அழைப்பையும் அதன் விளைவுகளையும் பவுல் சுருக்கமாக எடுத்துரைக்கிறார் (2 கொரி. 6:16-18):

பரிசுத்தத்திற்கான அழைப்பு, ஊழியர்கள் மற்றும் சபையார் ஆகிய இரு தரப்பினரின் அன்றாட வாழ்க்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது:

- துன்பங்களை சகித்துகொள்ள வேண்டும் (2 கொரி. 6:4-5)
- ஆவியின் கனி கொடுக்க வேண்டும் (2 கொரி. 6:6)
- உண்மையாகவும் நீதியாகவும் இருக்க வேண்டும் (2 கொரி. 6:7)
- எல்லா சூழ்நிலையிலும் உறுதியாக நிற்க வேண்டும் (2 கொரி. 6:8-10)
- மற்றவர்களுக்கு நம் இருதயத்தை திறக்க வேண்டும் (2 கொரி. 6:11-13)
- அவிசுவாசிகளின் தீய செல்வாக்கிலிருந்து நம்மை தனிமைபடுத்தி கொள்ள வேண்டும் (2 கொரி. 6:14-15)

## அழைப்பு

- பாவ இடங்களிலிருந்து வெளிறே
- பாவிகளிடமிருந்து விலகி நிற்க
- அசுத்தமானவைகளை தொடாதிருக்க

## விளைவு

- நான் உங்களோடு வாசம் பண்ணுவேன்
- நான் உங்கள் தேவனாயிருப்பேன்
- நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள்
- நான் உங்களை பெற்றுக்கொள்வேன்
- நான் உங்கள் பிதாவாயிருப்பேன்

# கூட்டுமுயற்சியின் விளைவு


# ஆறுதலும் மகிழ்ச்சியும்


"மிகுந்த தைரியத்தோடே உங்களுடன் பேசுகிறேன்; உங்களைக்குறித்து மிகவும் மேன்மைபாராட்டுகிறேன், ஆறுதலால் நிறைந்திருக்கிறேன், எங்களுக்கு உண்டான சகல உபத்திரவத்திலேயும் பரிபூரண சந்தோஷமாயிருக்கிறேன்." (2 கொரிந்தியர் 7:4)

**தான் எதிர்கொண்டதில் சிக்கல்கள் இருந்தபோதிலும், பவுல் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார்(2 கொரி. 7:4). இந்த மகிழ்ச்சிக்கு காரணம் என்ன?**



பவுல் கொரிந்தியர்களுக்கு ஒரு கடுமையான கடிதத்தை எழுதியிருந்தார், அது அவர்களை வருத்தமடைய செய்திருந்தது (2 கொரி. 7:8). ஆனால் அந்த துக்கம் அவர்களை மனந்திரும்புதலுக்கு வழிநடத்தியது (2 கொரி. 7:9-10). இது பவுலுடனான அவர்களின் உறவிலும், ஒருவருக்கொருவர் கொண்டிருந்த உறவிலும் முழுமையான மாற்றத்தை ஏற்படுத்தியது (2 கொரி. 7:11-12).











அதனால், அனைவருக்கும் ஆறுதல் கிடைத்தது, பவுலின் உடன் ஊழியரான தீத்துவும் ஆறதல் அடைந்தார்(2 கொரி. 7:7). தீத்துவின் வருகை பவுலுக்கு ஆறுதல் அளித்தது (2 கொரி. 7:6). கொரிந்தியர்கள் ஆறுதல் அடைந்திருந்தனர், அது பவுலுக்கும் ஆறுதல் அளித்தது (2 கொரி. 7:13).

ஆனால் பவுல் அதற்கான பெருமையை எடுத்துக்கொள்ளவில்லை. போதகர்களும் சபையினரும், மகழ்ச்சியையும், ஆறுதலையும் அனுபவிக்க முடியும், ஏனென்றால் நம் தேவன், "சிறுமைப்பட்டவர்களுக்கு ஆறுதல் செய்கிற தேவன்" (2 கொரி. 7:6மு).

“'ஊழியம்' என்பது சேவையைக் குறிக்கிறது; இந்த ஊழியத்திற்கே நாம் அனைவரும் அழைக்கப்பட்டுள்ளோம். தங்களுக்குப் பிடித்தவாறு வாழும் வாழ்க்கையைத் தேர்ந்தெடுப்பது கடவுளுக்கு இழைக்கப்படும் அவமதிப்பாகும். என் சகோதர சகோதரிகளே, சத்தியத்தின் ஒளி தங்கள் பாதையில் வீசப்படாததால், ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கான ஆன்மாக்கள் அழிந்துபோவதையும் தங்கள் பாவங்களிலேயே மடிந்து போவதையும் நீங்கள் உணர்கிறீர்களா? நம் உலகில் செய்யப்பட வேண்டிய ஒரு பெரும் பணி உள்ளது. மனிதர்கள் மனமாற்றம் அடைவது அந்நிய பாஷைகளைப் பேசுவதாலோ அல்லது அற்புதங்களைச் செய்வதாலோ அல்ல; மாறாக, சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பற்றிய பிரசங்கத்தின் மூலமே அது நிகழ்கிறது. உலகை மேம்படுத்துவதற்கான முயற்சியில் ஏன் தாமதிக்க வேண்டும்?

எலன் ஜி உவைட் (ரி.ஃ.பளக்டிங் க்றைஸ்ட், ஆகஸ்ட் 30)